



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமிரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமிரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் ஆகிர் பிறை 23 ஹிஜ்ரி 1437

Friday of Jumada Al Thaany 23rd Hijri 1437

1st April 2016

| | |
|---|---|
| தலைப்பு: | **நற்செயல்களை செய்வதில் முந்திக்கொண்டவர்கள்!** |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | நற்செயல்களை செய்வதில் முந்திக்கொண்டவர்கள்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! எல்லாச் சூழலிலும் நற்செயல்களை செய்ய வேண்டும் என்று நமக்கு கட்டளையிடுகிறான். தொடர்ந்து நல்ல அமல்களை செய்து வருபவர்களுக்கு சிறப்பான கௌரவத்தை தருவதாக இறைவன் வாக்குறுதி தருகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(3:102)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوتُنَّ إِلاَّ وَأَنتُم مُّسْلِمُونَ

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்பட வேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் இறந்துவிட வேண்டாம்”

**அல்லாஹ்வின் அடியார்களே**! நாளை மறுமையை நோக்கி பயணப்பட வேண்டும் என்பதற்கான ஒரு களமே இவ்வுலக வாழ்வாகும். எனவே யார் இவ்வுலகில் நல்ல வாழ்கையை வாழ்கிறாரோ நிச்சயம் அவர் கிருபை உள்ள நாயனின் திருப்பொருத்தத்தை பெற்று கண்ணியமான அவனுடைய அருகாமையை பெற்றுக் கொள்வார். தான் கொண்டுள்ள இறைநம்பிக்கையின் படி ஒவ்வொரு மனிதனும் தன்னால் முடிந்த அளவு நல்ல செயல்களை செய்ய வேண்டும். மனிதர்கள் பல்வேறு விதமான கடும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அவற்றில் நன்மையான விளைவுகளும், தீமையான விளைவுகளும் உள்ளன. இறைவன் கூறுகிறான்: (35:32)

فَمِنْهُمْ ظَالِمٌ لِنَفْسِهِ وَمِنْهُمْ مُقْتَصِدٌ وَمِنْهُمْ سَابِقٌ بِالْخَيْرَاتِ بِإِذْنِ اللَّهِ ذَلِكَ هُوَ الْفَضْلُ الْكَبِيرُ

“எனினும், அவர்களில் பலர் தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டனர்; வேறு சிலர் நிதானமாக நடந்து கொண்டனர். மற்றும் சிலரோ அல்லாஹ்வுடைய கட்டளைப்படி நன்மையான காரியங்களில் முந்திக் கொள்கின்றனர். இதுவே மிகப் பெரும் பாக்கியமாகும்”

இவர்களில் நன்மையான செயல்களுக்கு முன்னுரிமை அளிப்பவர் தன் வாழ்நாளில் எந்த ஒரு நேரத்தையும் வீணாக கழித்திட மாட்டார். ஒவ்வொரு பொழுதிலும் ஏதாவது ஒரு நன்மையான செயலில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார். இவரைப் போன்றவர் தன் குடும்பத்தார்கள், குடிமக்கள், தன்னுடைய தேசம், பொது மக்கள் இப்படி யாருக்கேனும் பயன்படும் விதத்தில் நன்மையான செயல்களை செய்து கொண்டிருப்பார். இவ்வுலக வாழ்வு போட்டியும் விறுவிறுப்பும் நிறைந்ததாகும். எந்த ஒரு சிறு வாய்ப்பையும் மிகச் சரியாக பயன்படுத்துபவரே வாழ்வில் முன்னேற முடியும். பயனுள்ள செயல்களை செய்பவர், முக்கியத்துவம் வாய்ந்த செயல்களை செய்பவர், விடா முயற்சியோடு ஈடுபடுபவர் போன்றவர்கள் இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் நிலையான வெற்றியை பெறுவார்கள்.

நன்மையாக இருந்தாலும், தீமையாக இருந்தாலும் இவ்வுலகில் மனிதன் ஏதாவது ஒரு செயலை செய்து கொண்டே இருக்கிறான். மனிதனின் நிலையைப் பற்றி இறைவன் மிக தெளிவாக கூறுகிறான்: (84:6)

يَا أَيُّهَا الإِنسَانُ إِنَّكَ كَادِحٌ إِلَى رَبِّكَ كَدْحاً فَمُلاقِيهِ

“மனிதனே! நீ உன் இறைவனிடம் செல்லும் வரையில் (நன்மையோ தீமையோ பல வேலைகளில் ஈடுபட்டுக்) கஷ்டத்துடன் முயற்சி செய்துகொண்டே இருக்கின்றாய். (பின்னர் மறுமையில்) அவனை நீ சந்திக்கின்றாய்”

கஷ்டப்படுபவன் என்றால் ஏதாவது பணியில் ஈடுபட்டுக் கொண்டே அதற்குரியதை அடைந்து கொள்வதாகும். நம்முடைய முயற்சிகளும், செயல்பாடுகளும் நன்மையான வழியில் அமைந்திருக்க வேண்டும் என்று இறைவன் நம்மில் எதிர்பார்க்கிறான். தடுக்கப்பட்டவைகளை விட்டு விலகி, தீய செயல்களை புறக்கணித்து நாம் வாழ வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறான். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (5:48)

فَاسْتَبِقُوا الخَيْرَاتِ إِلَى اللَّهِ مَرْجِعُكُمْ جَمِيعاً فَيُنَبِّئُكُمْ بِمَا كُنتُمْ فِيهِ تَخْتَلِفُونَ

“ஆகவே, (இவைகளில்) மேலான (இஸ்லாமிய) வழியின் பக்கம் விரைந்து செல்லுங்கள். அல்லாஹ்வின் பக்கம்தான் நீங்கள் அனைவரும் செல்ல வேண்டியதிருக்கின்றது. நீங்கள் எதில் (அபிப்பிராய பேதப்பட்டுத்) தர்க்கித்துக் கொண்டிருந்தீர்களோ அதனை அவன் உங்களுக்கு நன்கறிவித்து விடுவான்”

சங்கை நிறைந்த நபிமார்கள் அனைவரும் இறைவனின் கட்டளையை முழுவதுமாக ஏற்று நடந்தார்கள். எனவே இறைவன் நாடிய விதத்தில் நன்மையான செயல்களில் மட்டுமே ஈடுபட்டு வந்தார்கள். இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (21:90)

إِنَّهُمْ كَانُوا يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَيَدْعُونَنَا رَغَباً وَرَهَباً وَكَانُوا لَنَا خَاشِعِينَ

“நிச்சயமாக இவர்கள் அனைவரும் நன்மையான காரியங்களைச் செய்வதில் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டிருந்தார்கள். (நம்முடைய அருளை) விரும்பியும் (நம்முடைய தண்டனையைப்) பயந்தும் நம்மிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் நம்மிடம் மிக்க உள்ளச்சமுடையவர்களாகவும் இருந்தார்கள்”

அந்த நபிமார்களுக்கு பின்னர் காலம் காலமாக வாழ்ந்து வரும் நல்லடியார்களும் அந்த நபிமார்களின் குணாதியசங்களை பின்பற்றியே வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய அடியார்களை பற்றி இறைவன் கூறுகிறான்: (3:114)

وَيُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَأُوْلَئِكَ مِنَ الصَّالِحِينَ

“அன்றி, அவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டு, (மனிதர்களுக்கு) நன்மையான காரியங்களை ஏவி, தீமையான காரியங்களிலிருந்து தடுத்து, நன்மையான காரியங்களைச் செய்ய விரை(ந்தும் செல்)கின்றனர். இத்தகையவர்களும் நல்லவர்களில் உள்ளவர்களே”

மேலும் இறைவன் கூறுகிறான்: (23:60-61)

وَالَّذِينَ يُؤْتُونَ مَا آتَوْا وَقُلُوبُهُمْ وَجِلَةٌ أَنَّهُمْ إِلَى رَبِّهِمْ رَاجِعُونَ* أُوْلَئِكَ يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَهُمْ لَهَا سَابِقُونَ

“எவர்கள் தங்களுக்குச் சாத்தியமான வரையில் தானம் கொடுப்பதுடன் அவர்களுடைய உள்ளங்கள் நிச்சயமாக தங்கள் இறைவனிடம் செல்வோம் என்று பயந்து கொண்டிருக்கின்றனவோ அவர்களும்தான், மேலும் இவர்கள்தாம் நன்மையான காரியங்களில் விரைந்து செல்கின்றவர்கள். மேலும், அவர்கள் அதை (செய்வதில் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்கின்றனர்”

**முஸ்லிம்களே**! ஒரு மனிதன் தன் சிந்தனையாலும், சொல்லாலும் செயலாலும் நன்மையான செயல்களை மட்டுமே இலக்காக கொண்டிருந்தால் நிச்சயம் அவன்தான் அல்லாஹ் தஆலா உடைய கட்டளைகளை முழுவதுமாக நிறைவேற்றி வருவான். நிலையான மற்றும் சுபிட்சமான வாழ்வை மேற்கொள்வான். இதனடிப்படையிலேயே ஒவ்வொரு மனிதனும் தம்மால் முடிந்த அளவிற்கு நல்ல செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும், பயனுள்ள வகையில் தனது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆசை கொள்கிறார்கள்.

நல்ல செயல்களை செய்வதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. அதன் வகைகள் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொரு காலச் சூழலுக்கு ஏற்றவாறு நன்மை செய்யும் வாய்ப்புகள் பல்கி

பெருகுகின்றன. மனிதனுக்கு பயனுள்ளதாகவும், அவனக்கு நன்மை தருவதாகவும் அமைந்திருக்க வேண்டும் என்பதே இதன் உச்ச நிலை இலக்காகும். இதன் மூலமே நன்மையான செயல்கள் முழுமை பெறும், ஒரு சமுதாயமும், தேசமும் பயனடைந்து கொள்ளும். ஒவ்வொரு காலத்திலும் நேரத்திலும் மனிதன் செய்யக்கூடிய நல்ல செயல்களை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்தி அவற்றிற்கு உரிய அங்கீகாரமும் தருகிறார்கள். எனவேதான் ஒரு கட்டத்தில் அவர்கள் இவ்விதம் கூறியுள்ளார்கள்:

كُلُّ مَعْرُوفٍ صَدَقَةٌ

“ஒவ்வொரு நற்செயலும் தர்மமே” (متفق عليه)

மேலும் பிறிதொரு முறை பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

وَقَالَ عَلَيْهِ الصَّلاَةُ وَالسَّلاَمُ:عَلَى كُلِّ مُسْلِمٍ صَدَقَةٌ. قَالُوا: فَإِنْ لَمْ يَجِدْ؟ قَالَ:فَيَعْمَلُ بِيَدَيْهِ فَيَنْفَعُ نَفْسَهُ وَيَتَصَدَّقُ. قَالُوا: فَإِنْ لَمْ يَسْتَطِعْ أَوْ لَمْ يَفْعَلْ؟ قَالَ:فَيُعِينُ ذَا الْحَاجَةِ الْمَلْهُوفَ. قَالُوا: فَإِنْ لَمْ يَفْعَلْ؟ قَالَ:فَيَأْمُرُ بِالْخَيْرِ أَوْ بِالْمَعْرُوفِ. قَالُوا: فَإِنْ لَمْ يَفْعَلْ؟ قَالَ:فَيُمْسِكُ عَنِ الشَّرِّ، فَإِنَّهُ لَهُ صَدَقَةٌ

“தர்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும்" என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதற்கு தோழர்கள், “இறைத்தூதர் அவர்களே! (தர்மம் செய்வதற்கான பொருள்) ஏதும் கிடைக்காவிட்டால்...?” எனக் கேட்டனர். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “ஏதேனும் கைத்தொழில் செய்து, தாமும் அதன் மூலம் பலனடைந்து, தர்மமும் செய்ய வேண்டும்" என்றார்கள். மறுபடியும் தோழர்கள், “அதுவும் முடியவில்லை அல்லது அவர் அவ்விதம் செய்ய முடியாமல் போனால்” எனக் கேட்டதற்கு, “தேவையுடைய, உதவி தேடி நிற்கும் துயருற்றவர்களுக்கு உதவ வேண்டும்" என்று பதிலளித்தார்கள். மீண்டும் தோழர்கள், “அதுவும் இயலாவில்லையாயின்" என்றதும், “(மற்றவர்களிடம்) நன்மையான செயல்கள் அல்லது ஆகுமாக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான செயல்களை எடுத்துச் சொல்ல வேண்டும்” என்று பதிலளித்தார்கள். மீண்டும் தோழர்கள், “அதுவும் இயலாவில்லையாயின்" என்றதும் “நற்காரியத்தைச் செய்து தீமையிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே அவர் செய்யும் தர்மமாகும்!" எனக் கூறினார்கள். (متفق عليه)

பிறிதொரு நபிமொழியில் பின்வருமாறு இடம் பெறுகிறது.

كُلُّ كَلِمَةٍ طَيِّبَةٍ صَدَقَةٌ، وَعَوْنُ الرَّجُلِ أَخَاهُ صَدَقَةٌ، وَالشَّرْبَةُ مِنَ الْمَاءِ يَسْقِيهَا صَدَقَةٌ، وَإِمَاطَةُ الأَذَى عَنِ الطَّرِيقِ صَدَقَةٌ

“ஒவ்வொரு அழகிய உயர்தரமான வார்த்தையும் தர்மம் ஆகும். ஒரு மனிதன் தன் சகோதரனுக்கு உதவுவதும் தர்மமாகும், (மற்றவர் குடிப்பதற்கு) தண்ணீர் தருவதும் தர்மமாகும், (பொது) பாதையில் கிடக்கும் ஓர் இடையூறை அகற்றுவதும் தர்மமாகும்” (البخاري في الأدب المفرد 152/1)

மனிதர்கள் இவற்றை சுலபமாக கருதிவிடாமல், அதிக அக்கறையோடும், ஈடுபாட்டோடும் இத்தகைய சிறிய சிறிய நற்செயல்களையும் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு ஒவ்வொன்றையும் நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

**அல்லாஹ்வின் அடியார்களே**! ஒரு முஃமீன் தன்னுடைய ஒவ்வொரு அசைவிலும், செயல் திட்டத்திலும் நன்மையை மட்டுமே செய்ய வேண்டும் என்கிற மன உறுதியோடு செயல்பட வேண்டும். எச்சூழலிலும் நன்மையை மட்டுமே அறுவடை செய்ய வேண்டும். அவனிடம் எந்த குறையையும், தீமையும் அவனுடைய உறவினர்கள் காண முடியாது, அவனுடைய பக்கத்து வீட்டுக்கார்கள் கூட அவனிடம் எந்த தவறையும் காண முடியாது, எந்த விதத்திலும் அவன் கெடுதல் செய்வதையோ, அநியாயம் செய்வதையோ மற்ற எவராலும் பார்க்க முடியாது, அந்த அளவிற்கு தமது வாழ்வை தூய்மையாக கட்டமைத்துக் கொள்வான்.

இவ்வுலகிலும் மறுமை வாழ்விலும் சிறப்பு வாய்ந்த நல்லடியானாக இந்த மனிதன் தன்னை சிறுக சிறுக மேம்படுத்தி தகவமைத்துக் கொள்வான். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (3:115)

وَمَا يَفْعَلُوا مِنْ خَيْرٍ فَلَن يُكْفَرُوهُ

“இவர்கள் எந்த நன்மையைச் செய்தபோதிலும் அது நிராகரிக்கப்பட மாட்டாது. (அதற்குரிய பிரதிபலனை அடைந்தே தீருவார்கள். ஏனென்றால், இத்தகைய) இறையச்சமுடையவர்களை அல்லாஹ் நன்கறிவான்”

அதாவது அவர்கள் செய்த நன்மையான எந்த செயலையும் அல்லாஹ் வீணாக்கி விடுவதில்லை, மாற்றமாக அதனை பாதுகாத்து அதற்குரிய நன்மைகளை வழங்கி விடுகிறான். நல்ல செயல்களில் ஈடுபடுபவரை அந்த நற்செயலே மென்மேலும் அவரை பக்குவப்படுத்தி பண்படுத்திக் கொண்டே இருக்கும். இதனால் அவர் அல்லாஹ்வின் நேசத்திற்குரிய அடியானாகவும், நற்செயல்களில் அதிக ஈடுபாடு கொண்டவனாகவும் மாறிவிடுவார்.

நபிகள் நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَحَبُّ الْأَعْمَالِ إِلَى اللَّهِ تَعَالَى أَدْوَمُهَا وَإِنْ قَلَّ

“நற்செயல்களில் அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானது (தொடர்ந்து செய்யப்படும்) நிலையான நற்செயலே ஆகும். அது (எண்ணிக்கையில்) குறைவாக இருந்தாலும் சரியே” (متفق عليه)

அதாவது ஒருவன் ஒரே ஒரு நற்செயலை வழமையாக செய்கிறான், அந்த செயல் மிகவும் சிறியதாக இருந்தாலும் தன் வாழ்நாள் முழுவதும் இடைவிடாமல் தொடர்ந்து செய்துவந்தால் அந்த செயலை அல்லாஹ் நேசிக்கிறான்.

மேலும் ஒரு ஹதீஸில் பின்வருமாறு இடம்பெறுகிறது:

الْخَيْرُ عَادَةٌ، وَالشَّرُّ لَجَاجَةٌ

“நன்மையான செயல்கள் வழமையாக நடைபெறுவதாகும், (ஆனால்) தீமையான செயல்கள் (ஷைத்தான் மற்றும் கெட்ட சிந்தனையால் இடைவிடாமல்) தூண்டப்பட்டு நடைபெறுவதாகும்” (ابن ماجه : 221 ، وصحيح ابن حبان 8/2)

அதாவது நீங்கள் தொடர்ந்து செய்து வருவதின் மூலம் நற்செயல்கள் செய்யும் பழக்கம் உங்களுடைய அன்றாட வழமையாக மாறிவிட வேண்டும். தீமையின் மூலம் உங்களுடைய மனம் இறுகி விடும், வேறு பல ஆபத்துகளும் வந்து சேரும். எனவே தீமையானவற்றை விட்டு விலகி விடுங்கள். இதனடிப்படையில் நமது வாழ்வை அமைத்துக் கொள்ள உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நிலைகளை நன்மையான போக்கிலேயே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படி நன்மையான போக்கில் நம்மை நாமே நிர்ணயம் செய்து கொண்டால்தான் போட்டி மனப்பான்மை உள்ள இவ்வுலகில் வெற்றி பெற முடியும்.

எந்த நிலையிலும் நன்மையான செயல்களை மட்டுமே செய்து வருபவர் நிச்சயம் அவர்தாம் மரியாதை நிறைந்த நல்ல மனிதர். இவரை போன்றவர்களால் மொத்த சமூகத்திற்கும் பலன் கிடைக்கிறது. பூமியில் உள்ளவர்களும், வானத்தில் உள்ளவர்களும் இத்தகைய மனிதர்களை முழுமையாக பொருந்திக் கொள்கிறார்கள்.

ஸஹாபி ஸல்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: யார் சீதேவித்தனமான வாழ்வை பெற விரும்புகிறார்களோ, அவர்கள் நல்ல செயல்களை மட்டுமே செய்யட்டும், மேலும் நன்மையான செயல்கள் நடக்கும் அவைகளில் வழமையாக கலந்து கொள்ள வேண்டும்” ( القدر للفريابي 61/1 :)

ஒருவர் நல்ல செயல்களை செய்து வருகிறார், அவற்றை பொறுப்புடன் வழமையாக செய்து வருகிறார், வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளையும் நன்மையான நோக்கில் மிக நிதானமாக முன்னெடுத்துச் செல்கிறார். இவருக்கு இறைவனின் உதவி கிடைக்கிறது. அவரை அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைத்துக் கொள்கிறான்.

**முஸ்லிம்களே**! நல்ல செயல்கள் நிச்சயம் இறைவனிடம் ஒரு சேமிப்பாகவே இருக்கும், வீணாகி விடுவதில்லை. அவற்றின் பலனாகத்தான் இக்கட்டான சூழ்நிலைகளிலும், சோதனையான நேரங்களிலும் இறைவன் பாதுகாக்கிறான். நெருக்கடியான சமயங்களில் இறைவனின் உதவி கிடைக்கும். சந்தர்ப்ப சூழ்நிலையில் நன்மை செய்திருந்தாலும், நிர்பந்தமான சூழலில் நன்மை செய்திருந்தாலும் அதற்கேற்றவாறு அதன் கூலி கிடைக்கும்.

வழமையாக நல்லது செய்பவர்கள் மூலம் அல்லாஹ் ஒரு சீதேவித்தனமான சமூகத்தை உருவாக்கி கொடுக்கிறான். இதனையே நீதமான நமது ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். ஒவ்வொருவரும் தம்மால் முடிந்த அளவிற்கு ஒரு சிறிய நற்செயலை அனுதினமும் வழமையாக செய்து வந்தால்தான் இந்த இலக்கை நாம்

அடைய முடியும். மதிப்பிற்குரிய மற்றும் கௌரவமான வாழ்வை பெறுவதற்கு ஒவ்வொருவரும் ஆர்வத்தோடு முந்திக்கொண்டு செயல்பட வேண்டும். அப்போதுதான் இவ்வுலகிலும் மறு உலகிலும் நம்மால் வெற்றி பெற முடியும். சீதேவித்தனத்தையும் பெற முடியும். நாம் இதில் தாமதம் செய்யக் கூடாது. நற்செயல்களை செய்வதற்கு தாமதம் செய்வதும், தள்ளிப்போடுவதும், நேரம் காலம் பார்த்து ஒத்தி வைப்பதும் சமச்சீரான வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

“கண்டிப்பாக நற்செயல் செய்வதை நீ தள்ளிப்போடாதே, காரணம் நேரம் தவறி விட்டால் மறுபடியும் அந்த நேரத்தை உன்னால் மீட்டெடுக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்” என்று ஓர் அறிஞர் கூறுகிறார். (قصر الأمل لابن أبي الدنيا : 144/1)

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (22:77)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا وَاعْبُدُوا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் குனிந்து சிரம் பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம்”

யா அல்லாஹ்! நன்மையான செயல்களை செய்வதற்கு நீ எங்களுக்கு உதவி புரிவாயாக!! தீய செயல்களை நாங்கள் விட்டொழிப்பதற்கும் நீ எங்களுக்கு உதவி புரிவாயாக!!! ஏழைகளை நேசிக்கும் பாக்கியத்தை நீ எங்களுக்கு தருவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! நன்மை செய்வதற்கான வாய்ப்புகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன. அதற்கான வழிகள் ஏராளமாக உள்ளன. ஒருவருக்கு அல்லாஹ் நல்ல செயல்கள் செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கி இருக்கிறான், இவர் ஏழைகளின் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறார், உதவி தேவைப்படுபவர்களுக்கு நிறைவான உதவி செய்து அவர்களின் முகங்களில் புன்சிரிப்பை காண்கிறார், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் செய்கிறார், பலகீனமானவர்களின் தேவையை நிறைவேற்றுகிறார், நிச்சயம் இவர் பாராட்டுக்குரியவர். இதற்குரிய கூலியை இவர் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வார். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (73:20)

وَمَا تُقَدِّمُوا لِأَنْفُسِكُمْ مِنْ خَيْرٍ تَجِدُوهُ عِنْدَ اللَّهِ هُوَ خَيْرًا وَأَعْظَمَ أَجْرًا

“நன்மையான காரியங்களில் எவைகளை நீங்கள் உங்களுக்காக, (உங்கள் மரணத்திற்கு முன்னதாகவே) செய்து வைத்துக் கொண்டீர்களோ அவைகளையே, மேலான நன்மைகளாகவும் மகத்தான கூலியாகவும் நீங்கள் அல்லாஹ்விடத்தில் காண்பீர்கள்”

அதாவது, அல்லாஹ் தஆலாவிற்காக தூய எண்ணத்தோடு தான தர்மங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான நற்செயல்களை நீங்கள் இந்த உலகில் செய்து வந்தால் அதற்குரிய கூலியை நாளை மறுமையில் நிச்சயம் நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். நீங்கள் சேமித்து

வைத்திருப்பதிலேயே இதுதான் மிகச் சிறந்ததாகும். அதிகமான நன்மைகளை பெற்றுத் தருவதும் இதுதான்((700/23) تفسير الطبري)

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!!

சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்க்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.
யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக!

எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).